# வெடுக்குநாறிமலையில் கைதானவர்களுக்கு கைவிலங்குகளுடன் தொடர்ந்தும் சிகிச்சை!



வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரும் கைவிலங்குகளுடன் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மகா சிவராத்திரி தினத்தன்று வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு நாளை வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில், அவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டனர் என்று சட்டத்தரணிகள் கடந்த சனிக்கிழமை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற்படி 8 பேரையும் மன்றின் உத்தரவுக்கமைய வவுனியா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அழைத்துச் சென்றிருந்தனர்.

இதன்போது மேற்படி 8 பேரினதும் உடல் நிலையைக் கருத்தில்கொண்டு அவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டுள்ளனர். 2➤

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 29 திங்கட்கிழமை 11.03.2024 கதிர் 199

## வெடுக்குநாறிமலையில் பொலிஸார் காட்டுமிராண்டித்தனம் யாழ் மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் கண்டனம்

### போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுத்தார்

வவுனியா வெடுக்குநாறிமலையில் பொலிஸார் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனத்துக்கு கண்டனம் வெளியிட்டுள்ள யாழ் மாநகர முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், இதற்கு எதிராக பொது அமைப்புகளால் நல்லூரில் இன்று மாலை நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்று வலுச்சேர்க்குமாறும் பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

வெடுக்குநாறிமலையில் பொலிஸார் செயற்பட்ட விதம் தொடர்பாக வி.மணிவண்ணன் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், சிவ பக்தர்களுக்குரிய கவலைகள் நீங்கி, காரிய வெற்றியை தரக் கூடிய நாள் மகா சிவராத்திரி விரத நாளாகும். அந் நாளில் சிவாலயங்களில் பக்தர்கள் இரவு முழுவதும் கண் விழித்து ஓம் நமசிவாய என்று திரு நாமத்தை உச்சாடனம் செய்வார்கள். அவ்வாறே தமிழர்களின் மிகத் தொன்மையான வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்திலும் சிவபக்தர்கள் ஒன்று கூடி சிவபெருமானுக்கு ஆராதனைகளைச் செய்தார்கள்.

அந்நேரத்தில் சிவபூஜையில் கரடி போல் உள்நுழைந்த பொலிசார் அங்கிருந்த சிவபக்தர்கள் மீது தாக்குதல் நடத்தி வலுக்கட்டயமாக வெளியேற்றியதோடு 2➤

## பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு முன்னாள் அரசியல் கைதி அழைப்பு

வவுனியாவில் வசிக்கும் முன்னாள் அரசியல் கைதியும் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவருமான செ.அரவிந்தன், கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு (ரி.ஐ.டி.) அழைக்கப்பட்டுள்ளார்.

இதற்கான கடிதம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அரவிந்தனின் வீட்டுக்குச் சென்று நேற்று வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதியும் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவருமான செல்வநாயகம் அரவிந்தனை (ஆனந்தவர்மன்) நாளை காலை 9 மணிக்குக் கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணை பிரிவுக்கு வாக்குமூலம் பெற வருமாறு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது. 2➤

## அம்பாறை பாடசாலை மாணவன் மரணம் நீதி கோரி பொதுமக்கள் ஆர்ப்பட்டம்!



அம்பாறை - திருக்கோவில் பிரதேசத்தில் பாடசாலை மாணவன் ஒருவனின் உயிரிழப்புக்கு நீதி கோரி பொதுமக்கள் ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அம்பாறை திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயின்ற மாணவர் ஒருவர் மரதன் ஓட்டப்போட்டி நிகழ்வில் கலந்துகொண்டிருந்தபோது மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காது 2➤

## பொறியியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதால் அரச சேவை பொறியியலாளர்களுக்கு பற்றாக்குறை

### பொறியியலாளர் சங்கத்தின் செயலாளர் சூரியபண்டார

சுமார் 520 அரச சேவை பொறியியலாளர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதாகவும் அனுபவம் வாய்ந்த இளம் பொறியியலாளர்கள் அதிக எண்ணிக்கையில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகவும் அரச சேவை பொறியியலாளர்கள் சங்கத்தின் செயலாளர் சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 1520 பொறியியலாளர்களுக்கான தேவை இருக்கின்ற போதிலும் இங்கு தற்போது கிட்டத்தட்ட 1000 பேர் பொறியியலாளர்கள் மட்டுமே பணிபுரிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நீர்ப்பாசனத் துறைக்கு 380 பொறியியலாளர்களுக்கான தேவை இருக்கின்ற போதிலும், அங்கு தற்போது 229 பேர் மட்டுமே இருப்பதாகவும், அதற்கமைய, நீர்ப்பாசனத் துறையில் மாத்திரம் சுமார் 60 சதவீத பொறியியலாளர்கள் பற்றாக்குறை இருப்பதாகவும் செயலாளர் சூரியபண்டார குறிப்பிட்டுள்ளார். 2➤

## தலசீமியா உட்பட பல நோய்களுக்கான 252 வகை மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

### வைத்தியர் தொழிற்சங்க தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ

தலசீமியா உட்பட இன்னும் பல நோய்களுக்கு தேவையான 252 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் தொழிற்சங்க தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார். யுளிசைை வயடிடநவ 300அ, னுயைணழஒைஅந வயடிடநவ 50அப, வுசைஅநவாழிசைஅ வயடிடநவ 100 அப உட்பட பற்றாக்குறையாக உள்ள இன்னும் 252 வகையான மருந்துகள் தொடர்பான அறிக்கை தன்னிடம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சரும் செயலாளரும் பதவிகளிலிருந்து வெளியேறி 5 நிறைவடைந்துள்ள




போதிலும் தற்போதைய சுகாதார அமைச்சரும் செயலாளரும் மருந்துப் பற்றாக்குறைக்கு தீர்வைக் 2➤

## நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் 19 இல் ஆரம்பம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

குறித்த பிரேரணை மீது இரு நாட்கள் விவாதம் நடத்தப்பட்டு 20 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படலாம் எனத் தெரியவருகின்றது.

மார்ச் மாதத்துக்குரிய 2ஆவது வார நாடாளுமன்ற அமர்வு 19 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அவ்வாரத்துக்குரிய நிகழ்ச்சி நிரல் தொடர்பில் ஆராய சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு அடுத்த வாரம் கூடும்.

இதன்போது மேற்படி திகதிகள் உறுதிப்படுத்தப்படலாம் எனத் தெரியவருகின்றது.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் எதிரணிகள் எல்லாம் ஒன்றுபட்டுள்ளதால், விவாதம், வாக்கெடுப்பு 2➤

# யாழ். பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்பு மார்ச் 14, 15, 16 இல்!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, எதிர்வரும் பங்குனி மாதம் 14ம், 15ம், 16ம் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் ஒன்பது அமர்வுகளாக நடைபெறவுள்ளது. பட்டமளிப்பு விழாவின் போது 2,873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக விபரிப்பு ஒன்று இன்று திங்கட்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. இதன்போது பட்டமளிப்பு விழாக் குழுவின் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் சி. ரகுராம் பட்டமளிப்பு விழாத் தொடர்பான விபரங்களை வழங்கினார்.

இம்முறை நடைபெறும் பட்டமளிப்பு விழாவானது யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு 50ஆவது வருடத்தில் பொன்விழா நிகழ்வுகளின் முக்கிய நிகழ்வாக இடம்பெற இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

38வது பட்டமளிப்பு விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப்பதக்கங்களையும், புலமைப்பரிசில்களையும் வழங்கிக் கௌரவிப்பார்.

இப்பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம், கலைப் பீடம், பொறியியற் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், இந்துக்கற்கைள் பீடம், சித்தமருத்துவ அலகு மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தைச் சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங் கள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 441 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து எட்டு உள்வாரி மாணவர்களுக்கும், 330 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப் பதுடன், 94 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றி தழ்களும் வழங்கப்படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 441 பேர் உயர் பட்டத் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை ஒருவரும், முது மெய்யியல்மாணிப் பட்டத்தை 9 பேரும், சுற்றுச்சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்தை ஒருவரும், பண்பாட்டுக் கற்கைகளில் முதுமாணிப்பட்டத்தை 33 பேரும், கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணிப்பட்டத்தை 36 பேரும், தூய சக்தித் தொழில்நுட்பங்களில் முதுமாணிப் பட்டத்தை ஒருவரும், வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தை 73 பேரும், தமிழில் முதுமாணிப்பட்டத்தை 40 பேரும், கல்வியில் முதுமாணிப் பட்டத்தை 195 பேரும், சைவசித்தாந்தத்தில் முதுமாணிப்பட்டத்தை 28 பேரும், கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை (பகுதி நேரம்) 24 பேரும் பெறவிருக்கின்றனர்.

மேலும், இப்பட்டமளிப்பு விழாவில் சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 46 தங்கப்பதக்கங்களும், 9 புலமைப்பரிசில்களும், 48 பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தை பீடமட்டத்தில் கலைப் பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், தூய மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் சிறந்த செயலாற்றுகைக்கான (Best Performance) பேராசிரியர் கந்தையா குணரட்ணம் தங்கப்பதக்கத்தினை பல்கலைக்கழக மட்டத்தில் இருந்து விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பட்டமளிப்பு வைபவத்தின் ஒரு பாகமாக அமையும் நினைவுப் பேருரைகளான சேர். பொன் இராமநாதன் நினைவுப்பேருரை பங்குனி மாதம் 20ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப்பேருரை பி.ப 3.45 மணிக்கும் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவிருக்கின்றன.

## நம்பிக்கையில்லாப்.....

வாரத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்களைக் கொழும்பில் முகாமிட்டு இருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. (அ)

## தலசீமியா உட்பட.....

காண முடியாத நிலையில் இருப்பதாகவும் வைத்தியர் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

தற்போது பிரதேச மட்டத்திலான மருத்துவமனைகளுக்கு தேவையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு அந்தந்த மருத்துவமனைகளின் பணிப்பாளர்களுக்கு நிதி வழங்கப்படும் முறையொன்று காணப்படுவதாகவும், இதுவும் கூட ஒருவகையில் ஊழலுக்கு வழி வகுக்கும் எனவும் குறிப்பிட்ட அவர், மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு கொள்முதல் நடைமுறையொன்றை அமல்படுத்த வேண்டும் எனவும், இதுவரை புதிய அதிகாரிகள் அத்தகைய நடவடிக்கை எதனையும் எடுப்பதாக தெரியவில்லை எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-26)

## வெடுக்குநாறிமலையில் பொலிஸார் ...

ஆதிசிவனுக்கு படையல் செய்வதற்காக கொண்டு வந்த பொருட்களையும் தூக்கி வீசியமை மிலேச்சத்தமான காட்டு மிராண்டித்தனமான செயலாகும்.

ஆரம்பத்தில் வீதித் தடைகளையிட்டு ஆதிசிவன் ஆலயத்திற்கு பக்தர்கள் செல்வதைத் தடுத்தும் பின்னர் கால்நடையாக நடந்து செல்லுமாறு அனுமதித்து, அங்கு சென்றவர்கள் குடிப்பதற்கு குடிநீரை தடை செய்து வன்கொடுமை புரிந்தனர். பொலிசார் இட்ட இத் தடைகளையும் நெருக்கடிகளையும் தாண்டி ஆதி சிவன் மீது கொண்ட பக்தியால் ஆதிசிவன் ஆலயத்தில் இரவு நேரத்தில் சிவபூஜையில் ஈடுபட்ட சிவபக்தர்கள் மீது பொலிசார் தமது கோரத் தாண்டவத்தினை நிகழ்த்தினர்.

பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று எந்த பாராபட்சமும் பார்க்காமல் தூக்கியெறிப்பட்டார்கள். உலக மகளிர் தினத்தில் சிவபூஜையில் ஈடுபட்ட மகளிர் மீதும் பொலிசாரால் வன்முறைகள் கட்டவிழ்ந்து விடப்பட்டன. அவர்களின் ஆடைகளினை கிழித்து அவமதித்தனர்.

தமிழர்களின் மிகத் தொன்மையான ஆதிசிவன் ஆலயத்திற்கு பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள மக்கள் செல்லுகின்ற போது அவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து பாதுகாப்பு வழங்குகின்ற பொலிசார் தமிழர்கள் சிவபெருமானின் முக்கிய விரதநாளாகிய சிவராத்திரியில் கூட அடக்குமுறைகளைப் பயன்படுத்தி பூஜை வழிபாடுகளை தடைசெய்கின்றார்கள் என்றால் இது தமிழர்கள் மீதான அப்பட்டமான திட்டமிடப்பட்ட கலாசாரப் பண்பாட்டு இன அழிப்பாகும்.

இவ்வாறான கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலைகளுக்கு எதிராகவும் மரபுசார் வழிபாட்டுரிமைக்காகவும் தமிழர்கள் ஒன்றுபட்டு போராடவேண்டியது இன்றைய காலத்தின் நியதியாகும்.

அவ்வகையில் வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் இடம்பெற்ற மிலேச்சத்தமனான செயலினைக் கண்டிப்பதோடு அச் செயலினை கண்டித்து பொது அமைப்புக்களினால் இன்று நல்லூரில் ஒழுங்குபடுத்தப்பட்டிக்கும் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளுகின்றேன் - என்றுள்ளது.

வெடுக்குநாறிமலை கோயிலில் அரங்கேறிய பொலிஸ் அராஜகங்களை கண்டித்து யாழ்ப்பாணம் நல்லை ஆதீனம் முன்பாக இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு போராட்டம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. (01)

## வெடுக்குநாறிமலையில் ......

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கைவிலங்குடன் அவர்கள் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

## பொறியியலாளர்கள் .....

போதுமான சம்பளம் கிடைக்காமை, நிர்வாகச் சிக்கல்கள், தீர்மானங்களை எடுப்பதில் உள்ள சிக்கல்கள், அமைச்சுக்களில் உயர் பதவிகளுக்குச் செல்ல முடியாமை போன்ற பிரச்சினைகள் காரணமாக அனுபவமிக்க இளம் பொறியியலாளர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறுவதாகவும், இந்த நிலையில் மூன்று பொறியாளர்கள் செய்ய வேண்டிய பணியை ஒரு பொறியாளர் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இத்தகைய நிலையில் பணிபுரியும் பொறியியலாளர்களுக்கு பெரும் மன உளைச்சல் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொறியியலாளர்களின் சம்பளத்தை உயர்த்துமாறு கேட்டால் போதிய நிதி இல்லை என கூறுகின்றவர் கள் சில திட்டங்கள் தொடர்பான வெளிநாட்டு ஆலோசகர்களுக்கு மாத்திரம் மாதம் 75 இலட்சம் வழங்குவதாகவும் சூரியபண்டார மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-25)

## பயங்கரவாத்.....

அந்த அழைப்பாணையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விசாரணைப் பிரிவு 01 இந்த மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்கு அமைவாக முகநூல் கணக்கு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்கு வாக்குமூலம் தருவதற்காக 2024.03.12 ஆம் திகதி காலை 9 மணிக்கு இல149, கெப்பிட்டல் கட்டடம், கிருலப்பனை, நாரஹேன்பிட்ட முகவரியில் விசார ணைப் பிரிவு 01 இன் நிலையப் பொறுப்பதிகாரியைச் சந்திக்குமாறு தகவல் தருகின்றோம். - என்றுள்ளது. (அ)

## அம்பாறை பாடசாலை......

உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலையில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் இந்த உயிரிழப்பு இடம்பெற்றதாக தெரிவித்து அப்பகுதி மக்கள், பாடசாலை மாணவர்கள் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது வைத்தியசாலை மீது கல்வீச்சு தாக்குதலும் இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்தநிலையில், அப்பகுதியில் தொடர்ச்சியாக பதற்ற நிலை நிலவி வருவதுடன் அப்பகுதியில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (04)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சாய்ந்தமருது அரச ஓய்வூதியர்களின் நிதியத்துக்கு நிர்வாகிகள் தெரிவு

(எம் எப். நவாஸ்)

சாய்ந்தமருது பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட அரச சேவைகள் ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் 17 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நிதியத்தின் தலைவர் அல் ஹாஜ் ஐ. அப்துல் குத்தூஸ் அவர்களது தலைமையில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலக கணக்காளர் திருமதி என்.வி.எம். லரீப்பும், சிறப்பு அதிதிகளாக அம்பாறை மாவட்ட ஓய்வூதிய நிதியத்தின் செயலாளர் அல் ஹாஜ் ஏ. உதுமாலெப்பை, சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம். றம்ஸான் ஆகியோரும் ஏ.சி. முகம்மட் அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ. சாஜிதாவும் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வின்போது நிதியத்திலிருந்து மரணித்த அங்கத்தினருக்காக துஆ பிராத்தனை இடம்பெற்றது. பின்னர் நிகழ்வின் தலைவர் முன்னெடுக்கப்படவேண்டிய பல்வேறு திட்டங்கள் தொடர்பில் தனது முன்மொழிவை முன்வைத்தார்.

நிகழ்வில் நிதியத்தில் 15 வருடங்களுக்கு மேல் பணியாற்றி ஓய்வுபெற்ற எம்.ஐ.ஏ. ஜப்பார் கௌரவிக்கப்பட்டு அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

இறுதியாக இடம்பெற்ற நிர்வாகிகள் தெரிவின்போது தலைவராக எம்.எம்.எம். இஸ்மாயிலும் செயலாளராக ஏ.எல். மீராலெப்பையும் பொருளாளராக ஐ.எல். ஹம்ஸாவும் தெரிவு செய்யப்பட்டனர். உப தலைவராக யூ.எல்.ஏ. அஸீசும் உபசெயலாளராக இசட்.ஏ.லத்தீப்பும் நிர்வாக உத்தியோகத்தர்களாக ஏ.எம்.றசீட் மற்றும் எம். சி.ஜமால்டீன் ஆகியோரும் இசட்.ஏ. முனீர் கணக்கு பரிசோதகராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.



இங்கு ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தில் அங்கம் வகிப்பதிலுள்ள நன்மைகள் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டு, நிதியத்தில் இதுவரை இணைந்து கொள்ளாதவர்களை புதிய நிர்வாகம் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது.

# புனித ரமழானை முன்னிட்டு உலருணவுப்பொருட்கள் வழங்கல்

(அஸ்ஹர் ஆதம்)

புனித ரமழானை முன்னிட்டு கல்முனை நிதா உல் பிர் சமூக சேவை அமைப்பினால் உலர் உணவுப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இதற்கான நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருதில் இடம்பெற்றது.



நிதா உல் பிர் அமைப்பின் ஸ்தாபகத்தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான அல்ஹாஜ் இஸட்.எம்.அமீன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கல்முனை சாய்ந்தமருது மற்றும் காரைதீவு ஆகிய பிரதேச செயலகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 1000 பயனாளிகளுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் விஷேட பேச்சாளராக மருதமுனை தாருல்ஹுதா பெண்கள் கல்லூரியின் விரிவுரையாளர் அஷ்ஷேய்க் எம்.ஐ.எம். ஜிபான் மதனி கலந்து கொண்டார்.

இதில் நிதாஉல் பிர் அமைப்பின் சிரேஷ்ட ஆலோசகர்களான ஏ.பி.எம்.அஸ்ஹர் மௌலவி அலி ஜின்னா மற்றும் கல்முனை பிரதேச செயலக திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் எம்.ஜௌபர் சாய்ந்தமருது பிரதேச செயலக தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி. எம்.நஜீம் சமூக சேவையாளரும் வர்த்தகருமான எம். ஜிப்ரி, சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.ஜௌபர் உட்பட நலன் விரும்பிகள் மற்றும் நிதா உல் பிர் அமைப்பின் ஸ்தாபகத்தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான இஸட்.எம்.அமீன் ஹாஜியாரின் குடும்ப உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை கல்முனை மற்றும் சாயந்தமருது ஆகிய பிரதேசங்களிலுள்ள பள்ளிவாயல்கள் சிலவற்றில் கடமையாற்றும் இமாம்கள் மற்றும் முஅத்தின்களுக்குமான விசேட பொதிகளும் இங்கு வழங்கி வைக்கப்பட்டன.

# புதிய அதிபர்களுக்கான சேவை முன் பயிற்சிக்கால நிறைவு விழா



(எம்.எம்.றம்ஸீன்)

"அதிபரகங்களின் சங்கமம்" என்ற தலைப்பில் கடந்த ஞாயிறு மாளிகைக்காடு பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் சேவை முன் பயிற்சிக்கால நிறைவு விழா நடைபெற்றது.

உருவங்களால் அல்லாமல் உள்ளங்களால் ஒன்றுகூடிய அதிபரகங்களின் சங்கமம் நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் மற்றும் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம். ஷெய்யத் உமர் மௌலான ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

முன்னிலை அதிதியாக நிந்தவுர் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் சேவை முன் பயிற்சி நிலையத்தின் இணைப்பாளருமான யு.எல்.எம். சாஜித் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர் கணக்காளர் வை.ஹபிபுல்லாஹ் சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம். மலீக் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜிஹானா ஆலிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச். றியாஸா

ஓய்வு பெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். மனோகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# தமிழைப் போற்றி சைவம் வளர்ப்போம்! அறநெறிக் கல்வி ஆன்மீக செயற்பாடு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை, பெரியநீலாவணை நெக்ஸ்ட் ரெப் சமூக அமைப்பு, மட்டக்களப்பு சிவத்தொண்டர் திருக்கூடம் ஆகியன இணைந்து அம்பாறை மாவட்டத்தில் அறநெறி கல்வியை ஊக்கப்படுத்தும் செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றன.

அந்த வகையில் கல்முனை மணற்சேனை கிராமத்தில் பாலமுருகன் அறநெறி பாடசாலையில் அண்மையில் தமிழைப் போற்றி சைவம் வளர்ப்போம் எனும் தொனிப்பொருளில் அறநெறி ஆன்மீகச் செயற்பாடு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆன்மீக தியான குருஜி என்.தேவநேசன், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் கண.வரதராஜன், உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.லக்குணம் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.



# இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை அமெ. அதிபர் பைடன் கடுமையாக விமர்சிப்பு!

காஸாவில் ஹமாஸ/க்கு எதிரான போரை நடத்துவதன் மூலம் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது நாட்டைக் காப்பாற்றுவதைவிட, அதற்குத் தீங்கிழைத்து வருகிறார், என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு சனிக்கிழமை அளித்த பேட்டியில் அதிபர் பைடன், காஸாவில் நடைபெற்று வரும் போரால் அப்பாவி மக்கள் உயிரிழந்து வருகின்றனர். நெதன்யாகு இது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

இஸ்ரேல் கொண்டிருந்த நிலைப்பாட்டுக்கு நேர் எதிராக இது உள்ளது. இதை மிகப்பெரிய தவறாகக் கருதுகிறேன். 13 லட்சம் பாலஸ்தீனர்கள் அடைக்கலம் புகுந்துள்ள ராஃபா நகரத்தில் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்துவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். இதுவே அவர்களுக்கான எல்லை.

இஸ்ரேலின் பாதுகாப்பு மோசமான நிலையில் உள்ளது. அந்நாட்டுக்கு வழங்கி வரும் ஏவுகணை தற்காப்பு அமைப்புகள் உள்ளிட்ட ஆயுதங்களை வழங்கி வருவது நிறுத்தப்படாது' என்றார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 இல் ஹமாஸ் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் மேற்கொண்டு வரும் போர் நடவடிக்கைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்தது. இருப்பினும், காஸாவில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், இஸ்ரேல் தனது சர்வதேச ஆதரவை இழக்க நேரிடும் என அதிபர் பைடன் எச்சரித்து வருகிறார்.

காஸாவில் இது வரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30,960 ஆக அதிகரித்துள்ளது. காஸாவில் தற்காலிக துறைமுகம் அமைப்பதற்கான பொருள்களுடன் அமெரிக்க ராணுவ கப்பல் வர்ஜீனியா மாகாணத்திலிருந்து சனிக்கிழமை புறப்பட்டது. இந்தத் தற்காலிக துறைமுகம் செயல்பாட்டுக்கு வர சில வாரங்கள் ஆகலாம் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




காஸாவுக்குள் நிவாரணப் பொருள்களை சாலை வழியாகக் கொண்டுசெல்லும் வாகனங்களின் எண்ணிக்கை 500 க்கும் கீழாகக் குறைந்துள்ளது. இஸ்ரேல் விதித்துள்ள கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளே இதற்குக் காரணமாகும்.

இந்நிலையில், கடல் மார்க்கமாக நிவாரணப் பொருள்களை கொண்டுசெல்ல காஸாவின் கடலோரப் பகுதியில் தற்காலிக துறைமுகத்தை அமைக்க அமெரிக்க அதிபர் ஜோ பைடன் சில தினங்களுக்கு முன்பு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

# துருக்கியிடமிருந்து ராணுவ ட்ரோன்கள் மாலைதீவு அரசு கொள்முதல் செய்தது



மாலைதீவின் கடல் பகுதிகளைக் கண்காணிக்கும் ரோந்துப் பணிக்காக துருக்கியிடமிருந்து ராணுவ ஆளில்லா விமானங்களை (ட்ரோன்கள்) அந்த நாடு முதல்முறையாக கொள்முதல் செய்துள்ளது.

துருக்கியிடமிருந்து பெறப்பட்டுள்ள ராணுவ ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கு பிரத்யேக தளத்தை நிறுவுவதற்கான முயற்சிகளும் மாலைதீவு அரசால் தொடங்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மாலைதீவின் அதிபராகப் பதவியேற்றவுடன் முதல் வெளிநாடாக துருக்கிக்கு முகமது மூயிஸ் அரசு முறைப் பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தின்போது துருக்கி தயாரிப்பு ராணுவ வாகனங்களைப் பார்வையிட்ட மூயிஸ், ராணுவ ஆளில்லா விமானங்களைக் கொள்முதல் செய்ய துருக்கியின் 'பேகர் டிபென்ஸ்' நிறுவனத்துடன் ஒப்பந்தத்திலும் ஈடுபட்டார். எனினும், இந்த ஒப்பந்தம் குறித்த விவரங்களை மாலைதீவு அரசு இதுவரை வெளியிடவில்லை.

இந்நிலையில், துருக்கியில் தயாரிக்கப்பட்ட 'பேராக்டர் டிபி2' ஆளில்லா விமானங்கள் கடந்த 3 ஆம் திகதி மாலைதீவு அரசிடம் ஒப்படைக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து, மாலைதீவுக் கடற் பரப்பில் கண்காணிப்பு அமைப்பை நிறுவி, அதன் பிரத்தியேக பொருளாதார மண்டலத்தின் (கடல் எல்லைப் பகுதி) கட்டுப்பாட்டை உறுதி செய்ய மாலைதீவு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அதிபர் மூயிஸ் கடந்த 4 ஆம் திகதி அறிவித்தார்.

முன்னதாக, இந்த ஆண்டின் தொடக்கத்தில், பாதுகாப்பு சேவைகளில் பயன்படுத்தப்படும் பொருள்களுக்கான இறக்குமதி வரிகளை நீக்கும் அதிகாரத்தை அதிபருக்கு வழங்குவதற்காக இறக்குமதி வரி விலக்கு நடைமுறையை அதிபர் அலுவலகம் திருத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகின. ராணுவ ஆளில்லா விமானங்களை வாங்குவதற்கு வசதியாகவே விதிகளில் திருத்தம் செய்யப்பட்டதாக கருதப்படுகிறது.

சீன ஆதரவு நிலைப்பாடு கொண்ட மாலைதீவு அதிபர் மூயிஸ், கடந்த ஜனவரியில் சீனாவில் இருந்து திரும்பியதும் ஆளில்லா கண்காணிப்பு விமானங்களைப் பெற விரும்புவதாகக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (04)

# கிறிஸ்டோபர் நோலனின் 'ஓப்பன்ஹெய்மர்' 7 ஒஸ்கார் விருதுகளை அள்ளி அசத்தியது!



ஓப்பன்ஹெய்மர், புவர் திங்ஸ் ஆகிய திரைப்படங்கள் 2024 ஆம் ஆண்டுக்கான ஒஸ்கார் விருதுகளை அள்ளிக் குவித்துள்ளன.

96 ஆவது ஒஸ்கார் விருது விழா அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கோலாகலமாக நடைபெற்றது. அதில் கிறிஸ்டோபர் நோலனின் 'ஓப்பன்ஹெய்மர்' படம் 13 பிரிவுகளிலும், புவர் திங்ஸ் படம் 11 பிரிவுகளிலும் ஒஸ்காருக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதேபோல் 'பார்பி' படம் 8 பிரிவுகளில் போட்டியிட்டது.

விருது நிகழ்ச்சியை 4வது முறையாக ஜிம்மி கிம்மல் தொகுத்து வழங்கினார். அதில் ஓப்பன்ஹெய்மர் திரைப்படம் ஒட்டுமொத்தமாக 7 ஒஸ்கார் விருதகளை வென்று அசத்தியது.

சிறந்த திரைப்படம், சிறந்த இயக்குநர், நடிகர், துணை நடிகர், இசை, ஒளிப்பதிவு, படத்தொகுப்பு ஆகிய பிரிவுகளில் இப்படம் விருதுகளை வென்றது.

இதேபோல் "புவர் திங்ஸ்" திரைப்படமும் 4 ஒஸ்கார் விருதுகளைப் பெற்றது.

அந்தப் படம் சிறந்த நடிகை, சிறந்த ஆடை வடிவமைப்பு, சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு, சிறந்த ஒப்பனை மற்றும் சிகையலங்காரம் ஆகிய பிரிவுகளில் விருதுகளை வென்றது.

அதேசமயம், மார்ட்டின் ஸ்கர்செசி இயக்கிய கில்லர்ஸ் ஒஃப் த ஃப்ளவர் மூன் திரைப்படம் 10 ஒஸ்கார் விருதுகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டும் ஒரு விருதுகூடப் பெறவில்லை என்பது ரசிகர்களுக்கு ஏமாற்றமாக அமைந்தது.

# பாகிஸ்தானின் 14ஆவது அதிபராக ஆசிப் அலி சர்தாரி பதவியேற்றார்

பாகிஸ்தானின் 14ஆவது அதிபராக ஆசிப் அலி சர்தாரி (68) ஞாயிற்றுக்கிழமை பதவியேற்றார். அந்நாட்டு தலைமை நீதிபதி குவாஸி பயஸ் இஸா அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப், முப்படைத் தளபதிகள், உயரதிகாரிகள், வெளிநாட்டுத் தூதர்கள் பலர் பங்கேற்றனர்.

சர்தாரி, மறைந்த முன்னாள் பிரதமர் பெநசீர் புட்டோவின் கணவர் ஆவார். ஏற்கெனவே 2008 - 2013-ஆம் ஆண்டு காலகட்டத்தில் பாகிஸ்தானின் அதிபராக சர்தாரி பதவி வகித்துள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் முடிவுக்குப் பிறகு ஆட்சி அமைப்பதில் இழுபறி நீடித்த நிலையில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் (பிஎம்எல்-என்) கட்சிக்கு பிலாவல் புட்டோ சர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி (பிபிபி) ஆதரவு அளித்தது. அதையடுத்து, நவாஸ் ஷெரீபின் சகோதரர் ஷாபாஸ் ஷெரீப் பிரதமரானார்.

இதற்கு பிரதிபலனாக அதிபர் தேர்தலில் ஆசிப் அலி சர்தாரிக்கு பிஎம்எல்-என் கட்சி ஆதரவளித்தது. சனிக்கிழமை நடைபெற்ற அதிபர் தேர்தலில் சர்தாரி வெற்றி பெற்றார். பாகிஸ்தான் அதிபராகப் பொறுப்பேற்றுள்ள சர்தாரிக்கு சீன அதிபர் ஷி ஜின்பிங் வாழ்த்து தெரிவித்துள்ளார். (04)



# “பாடசாலைகளின் மேம்பாட்டு பேரவை” உதயம் நோன்பு கால விசேட செயற்பாடுகள் முன்னெடுப்பு

(நூருல் ஹுதா உமர்)

மருதமுனைப் பாடசாலைகளின் கல்வி மேம்பாடுகளை ஒருநிலைப்படுத்தி, மாணவர்களை ஒழுக்கவிழுமியங்களை நோக்கி திசைமுகப்படுத்தும் நோக்கில் மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா மற்றும் சமூக ஆர்வலர்களால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளின் நிமித்தம் “மருதமுனை பாடசாலைகளின் மேம்பாட்டு பேரவை” என்ற அமைப்பானது மருதமுனையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்முனை வலயக் கல்வி அலுவலக அதிகாரிகளின் மேற்பார்வையுடன் மருதமுனைப் பாடசாலை அதிபர்களின் கூட்டிணைவில் இதற்கான ஆரம்பக் கூட்டம் (10) மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ச/ஹதுல் நஜீம் தலைமையில் நடைபெற்றது.



கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிருவாகத்திற்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபிர், கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப் பாளர்களான எம்.எச்.றியாஸா(கல்வி முகாமைத்துவம்), பீ. ஜிஹானா ஆலிப் (கல்வி அபிவிருத்தி) உள்ளிட்ட அதிகாரிகளுடன் மருதமுனையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், அதிபர்கள், பிரதி அதிபர்கள் ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.

மருதமுனை கல்வி மேம்பாடு மற்றும் மாணவர்களின் ஒழுக்கச் சீராக்கம் ஆகியன தொடர்பில் விரிவான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன. இதன் போது நோன்புகால வணக்க வழிபாடுகள் கருதி சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

அதில், நோன்பு 20 வரை உயர்தரம் தவிர்ந்த ஏனைய மாணவர்களின் பாடசாலை நேரசூசி வகுப்புக்கள் மதியம் 12 மணிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும் என்றும் ரமழான் பிந்திய பத்தில் அதாவது நோன்பு 20 முதல் பெருநாள் முடியும் வரை எந்த மேலதிக வகுப்புக்களையும் நடத்த முடியாது. தரம் 6 முதல் 9 வரையிலான மாணவர்களுக்கு பாடசாலைகளில் மேலதிக வகுப்புக்கள் எதனையும் நடத்துவதில்லை - போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

மேலும் வீடுகளிலும், பிரத்தியேக நிலையங்களிலும் மேலதிக வகுப்புக்களை நடத்துகின்றவர்கள் மதியம் 12 க்கு முன்னர் நிறைவு செய்ய வேண்டும். இவ் அறிவுறுத்தல்களை மீறி வகுப்புக்களை நடத்தும் பாடசாலை ஆசிரியர்கள் இனங்காணப்பட்டு அதிபர்களினூடாக அவர்களுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தரம் 10, 11 மாணவர்களுக்கு திங்கள் முதல் வியாழன் வரை பாடசாலைகளின் மேலதிக வகுப்புக்கள் நடத்தப்பட வேண்டும். அவை மதியம் 12 மணிக்கு முன்னர் நிறைவு செய்யப்பட வேண்டும். பள்ளிவாசல்களில் தொழுகை நேரங்களில் இடையூறாக செயற்படும் மாணவர்களை விஷேட ஆசிரியர் செயலணி மூலம் கண்காணிக்க நடவடிக்கை எடுத்தல், பள்ளிவாசல்களினூடாக குத்பாக்களில் அல்லது குத்பாக்களின் பின்னர் மாணவர்களுககான குறுகிய நேர வழிகாட்டல் ஆலோசனைகளை ஏற்பாடு செய்தல் (பொருத்தமான வளவாளர்களைக் கொண்டு).

மாணவர்களின் நடத்தைகள் பொது இடங்களிலும் அவதானிக்கப்பட்டு அவை மாணவர்தலைவர், வகுப்புத்தலைவர் தெரிவுகளில் கருத்தில் கொள்ளப்படல், நோன்பு காலத்தில் ஆசிரியர்களின் செயற்பாடுகள் சமூகத்திற்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும் என்பதை ஆசிரியர்களுக்கு பாடசாலை மட்டத்தில் வலியுறுத்தல்

மேற்படி விடயங்களை அவதானித்து நோன்பு 10 இல் பேரவை கூடி அதன் முன்னேற்றங்கள் குறித்து ஆராய்தல், பேரவையின் செயற்பாடுகளை எதிர்காலத்தில் மேலும் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் இதனை முன்னேற்பாடாகக் கொண்டு ஏனைய கிராமங்களிலும் கல்வி மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுக்க முடியும் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் தமது உரையில் தெரிவித்தார்.

நோன்பு விடுமுறை முன்னெடுப்புக்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் பள்ளிவாசல்களினூடாக அறிவிக்கப்படுவதுடன் மருதமுனை உலமா சபையினரின் கவனத்திற்கு இவற்றைக் கொண்டு வருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மருதமுனையின் கல்வி மற்றும் மார்க்க விழுமியங்களை சீராக்கம் செய்தல் என்கின்ற எண்ணக்கருக்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட மருதமுனை பாடசாலைகளின் மேம்பாட்டுப் பேரவையின் இலக்குகளை அடைய மருதமுனையின் மார்க்க அமைப்புக்கள், புத்திஜீவிகள், பொதுநிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோர் ஒத்துழைப்புக்களை வழங்க. வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.




## கிழக்கில் இலங்கை வங்கி விளையாட்டுப் பெருவிழா



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாணத்தில் இலங்கை வங்கியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் உத்தியோஸ்கத்தர்களை அறிமுகம் செய்யும் வகையிலும் அவர்களிடையே மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விளையாட்டுப் பெருவிழா கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர்கள், கிளை முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இவ்விளையாட்டு விழாவில் கலந்து கொண்டனர்.

# வெடுக்குநாறி மலையில் பொலிஸார் அத்துமீறிய விடயம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம்

வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் தலத்திலே வழிபாட்டிலே ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயக் குருக்கள், பொதுமக்கள், அரசியல் தலைவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட அத்துமீறல்களினையும், அவர்கள் அங்கு இருந்தோரிலே பலரினைக் கைது செய்தமையினையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் தலத்தில் சிவராத்திரி தினத்தன்று பொலிஸார் மேற்கொண்ட அத்துமீறல்களைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், கடந்த மகா சிவராத்திரி தினத்தன்று இரவு வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் தலத்திலே வழிபாட்டிலே ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயக் குருக்கள், பொதுமக்கள், அரசியல்தலைவர்கள்மீது பொலிஸார் மேற்கொண்ட அத்துமீறல்களினையும், அவர்கள் அங்கு இருந்தோரிலே பலரினைக் கைது செய்தமையினையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மகா சிவராத்திரி சைவ, இந்து மக்களுக்கு மிகவும் முக்கியமான தினங்களிலே ஒன்று. அந்தத் தினத்திலே உலகெங்கும் வாழும் சைவ, இந்து மக்கள் ஆலயங்களிலே இரவு முழுவதும் விழித்திருந்து சமய அனுட்டானங்களிலே ஈடுபடுவர். அவ்வாறான ஒரு வேளையிலே பொலிஸார் ஆதி லிங்கேஸ்வரர் தலத்தினுள் நுழைந்து அது தொல்பொருள் ஆய்வுக்குரிய பாதுகாக்கப்பட்ட இடம் என்ற போர்வையிலே அங்கு அனுட்டானங்களிலே ஈடுபட்டிருந்த மக்களிற்கு பல இடையூறுகளை ஏற்படுத்தி இருக்கின்றனர். அவர்களுக்குத் தேவையான குடிநீர் கிடைப்பதனைத் தடுத்து நிறுத்தி இருக்கின்றனர். பின்னர் பூசைகளினைக் குழப்பி உள்ளனர். வழிபாட்டில் ஈடுபட்டோரினை பலவந்தமாக வெளியேற்றியும் கைது செய்துமுள்ளனர்.

இவை யாவும் அந்த மக்களின் சமய ரீதியிலான உரிமைகளை மோசமாக மீறும் செயல்களாகும் என்பதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

வெடுக்குநாறி மலையில் இடம்பெற்றிருக்கும் இந்தச் சம்பவம் வெறும் வன்முறையும், அத்துமீறலும் மாத்திரம் அல்ல் இது இலங்கையில் தொடரும் சிங்கள பௌத்த மேலாண்மைவாதக் கருத்தியலின் ஆகப் பிந்திய வன்முறை வடிவங்களிலே ஒன்று.

சிறுபான்மையாக இருக்கும் மக்களின் மத உரிமைகளை பாதிக்கும் செயன்முறைகளினை இலங்கையினை ஆட்சி செய்யும் அரசாங்கங்கள் காலங்காலமாக மேற்கொண்டு வந்திருக்கின்றனர். இந்த செயன்முறைகளினால் இந்து சமயத்தவர் மாத்திரமல்லாது, கிறீஸ்தவர்கள், இஸ்லாமியர்களும் பாதிக்கப்பட்டு வந்திருக்கின்றனர். பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசியல் யாப்பினைக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில், சிறுபான்மை மக்களின் மத உரிமைகளை மீறும் போக்குக்கள் யாப்பின் கருத்தியலுக்குள்ளேயே பொதிந்து போய் இருக்கிறது என்பதனை நாம் இங்கு சுட்டிக்காட்டுவது அவசியம். வெடுக்குநாறி மலைச் சம்பவம் இலங்கை அரசின் மதவாதக் குணாம்சத்தினால் ஏற்பட்ட ஒரு கட்டமைப்பு சார் விடயமாகவே பார்க்கப்படல் வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் சமூகங்கள் பெரும்பான்மையாக வாழும் இலங்கையின் வடக்குக் கிழக்கினைப் பௌத்த மயமாக்கம் செய்வதன் மூலமும், சிங்கள மயமாக்குவதன் மூலமும் இந்தப் பிராந்தியத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்களை அரசியல்ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் வலுவிழக்கச் செய்யும் செயன்முறைகளிலே இலங்கை அரசாங்கங்கள் பல தசாப்தங்களாக ஈடுபட்டு வந்திருக்கின்றன. இந்தச் செயன்முறைகளின் ஒரு வடிவமாகத் தொல்பொருளியல் ஆய்வு என்ற போர்வையில் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் தலத்தினையும் ஏனைய பல சைவ, இந்து மக்கள் வழிபடும் தலங்களையும் சிங்கள பௌத்தமயமாக்கும் நடவடிக்கைகள் அண்மைய சில வருடங்களாகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

கொழும்பில் இருந்து, மையப்படுத்தப்பட்ட முறையிலே, இராணுவக் கட்டமைப்புக்களின் துணையுடன், சிங்கள பௌத்தக் கருத்தியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்தத் தொல்பொருளியல் செயன்முறைகளின் போது வடக்குக் கிழக்கிலே பல சந்ததிகளாக இந்தத் தலங்களிலே தமது சமய அனுட்டானங்களில் ஈடுபடும் மக்களின் உரிமைகளுக்கும், கருத்துக்களுக்கும் எந்த விதமான இடமும் வழங்கப்படுவதில்லை. மாறாக தொல்பொருளியல் ஆய்வு என்பது இந்த மக்களின் மீதும், அவர்களின் சமய நம்பிக்கைகள் மற்றும் செயன்முறைகளின் மீதும் ஒரு வன்முறையாகவே ஏவப்படுகிறது. இந்த வன்முறையின் ஒரு விளைவே கடந்த சிவராத்திரி தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்களும் கைதுகளும்.

கைது செய்யப்பட்ட அனைவரும் உடனடியாக வழக்குகள் எதுவுமின்றி விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், வடக்குக் கிழக்கிலே தொல்பொருளியல் ஆய்வு என்ற பெயரிலும், வனப் பாதுகாப்பு என்ற பெயரிலும், மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் என்ற பெயரிலும் ஏனைய வடிவங்களிலும் இடம்பெறும் சிங்கள பௌத்த மயமாக்கற் செயன்முறைகள் யாவும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோருகிறது.

இனவாதத்தினையும், மதவாத்தினையும் முன்னெடுக்கும் அரசியலமைப்பும், அரசுக் கட்டமைப்பும் மாற்றப்பட்டால் மாத்திரமே இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் இன, சமய ரீதியிலே சமத்துவம் மிக்கவர்களாக வாழ முடியும். வெடுக்குநாறி மலைப் பிரச்சினைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அனைவரும் இவ்வாறான அரசியல் மாற்றங்களினை வலியுறுத்துவதன் மூலமாக இனவாதத்தினையும், மதவாதத்தினையும் முறியடிக்க முன்வர வேண்டும் என ஆசிரியர் சங்கம் கோருகின்றது - என்றுள்ளது.






## நாணல் சங்கை வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டம் "அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்" எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்த மகளிர் தின நிகழ்வின் மலர் வெளியீடும் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும், மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் மர்/ஹும் கலாபூசணம் பி.எம். எம்.ஏ.காதர் நினைவரங்கில் அமைப்பின் தலைவி பாத்திமா சூபா தலைமையில் (09) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான இலக்கிய வித்தகர் விருது பெற்ற நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினரும் எழுத்தாளருமான ஆசிரியர் மசூறா சுஹூறுத்தீன், இலக்கிய வட்டத்தின் ஊடக ஆலோசகராக இருந்து 2022 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண ஊடகத் துறைக்கான இளம் கலைஞர் விருது பெற்றுக் கொண்ட ஊடகவியலாளர் ஏ.எல். எம்.ஷினாஸ், மருதமுனையின் முதலாவது பெண் கவிஞரான திருமதி மாஜிதா தவ்பீக் ஆகியோர் விசேட விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

நாணல் கலை, இலக்கிய வட்டம் வருடா வருடம் நடாத்தி வருகின்ற மகளிர் தின நிகழ்வின் போது சிறந்த சாதனைத் தாய்மார்களை பாராட்டி கௌரவிப்பது வழமை அந்த வரிசையில் இம்முறை சிறந்த சாதனை தாயாக இருவர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். ஒருவர் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹூதுல் நஜீம் அவர்களுடைய தாயாரான முஹம்மது இஸ்மாலெப்பை செய்னப்பு, மற்றவர் ஏ.ஆர். சித்தி நயீமா ஆவார்.

நாணல் சஞ்சிகையினுடைய முதல் பிரதி பிரதம அதிதியாக கலந்து கொண்ட திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய காங்கிறஸ் கட்சியின் தலைவருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாவிடம் கையளிக்கப்பட்டு வெளியீட்டு வைக்கப்பட்டது. நாணல் கலை இலக்கிய வட்ட உறுப்பினர்களின் கலை கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டதோடு, அறிவிப்பாளர் சந்திரபேஸ் கஜானா நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

இந்த நிகழ்வில், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி, ஸ்ரீலங்கா சென்ஜூடி பரா மெடிக்கல் கல்லூரி பணிப்பாளர் எம்.எம். சப்றாஸ் மன்சூர், இன்ஸ ிரியூட் ஒப் கிளைமேட் சேன்ச் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.பி.ஸியாரத்துல் பெறோஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டதுடன் கலாசார உத்தியோகத்தர்கள், எழுத்தாளர்கள் இலக்கிய ஆர்வலர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.03.2024 இல் வெளியிடப்பெற்றது.